தமிழினத்தின் அவலம் போக்கிய, தனிப்பெரும் இயக்கத்தின் பவளவிழா!

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், உலகிலே பல்வேறு நாடுகள் அடிமைத்தலையகற்றி, சுதந்திர கீதமிசைக்க, புரட்சிகளுக்கு புது வடிவங்களமைத்து, வெற்றி பெற்று, சுதந்திரக் காற்றை சுவாசிக்க துவங்கிய காலத்தில், இந்தியாவில் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய இரும்புக் கரங்களில் சிக்கி நாடு இன்னலுற்ற வேளையில், இந்தியரிடையே பரவலாக வர்க்கபேத, வர்ணாசிரமக் கொடுமைகள் பெரும் பிரிவு மக்களை வதைத்தே வந்தது.

இந்தியாவெங்கும், உயர்சாதி, பார்ப்பனரல்லாதோர், கீழ்சாதி, தாழ்த்தப்பட்டோர் எனும் கொடுமைகள் தலை விரித்தாடியது.

குறிப்பாக தென்னகத்தில் இந்த இழிவு நிலை மேலோங்கி நின்ற காலத்தில், சுதந்திரப் போரை முன்னின்று நடத்திய காங்கிரஸுக்குள்ளேயே இந்த வகுப்பு வாத பிரிவு நிலை உழன்றதைக் கண்டு, பிராமணரல்லாதோர் இயக்கமென்றும், தென்னிந்திய நல உரிமைச் சங்கமென்றும் அன்றைய திராவிடத் தலைவர்கள் சர். பிட்டி. தியாகராயர், டி. எம்.நாயர். டாக்டர்.நடேசனார் ஆகியோரால் துவக்கப்பட்டு, சென்னை ராஜிதானி (Madras Presidency.) எங்கு முள்ள மக்களின் இழிநிலை அகற்றி, அடிப்படை தேவைகளை வலியுறுத்தி, அன்றைய ஆங்கில ஆட்சியரிடம் வலியுறுத்தி, வாதாடி பெற்றுத் தரும் இயக்கமாக வளர்ந்து, நீதிக்கட்சி ஆட்சிப் பொறுப்பேற்று, கடலூர் சுப்பராய ரெட்டியார், இராமராய நிங்கர் (பனகல் அரசர்), டாக்டர் பி. சுப்பராயன், முனுசாமி நாயுடு, இராவு ஸ்வேதாசலபதி இராமகிருஷ்ண ரெங்காராவ், (பொப்பிலி அரசர்), பொன்னம்பலம் தியாகராசன், வேங்கிடரெட்டி நாயுடு போன்றோர் முதலமைச்சர்களாக பொறுப்பிலிருந்த போது தான் சென்னை நகராட்சியில் சத்துணவு திட்டம், மருத்துவ கல்வி பயில சமஸ்கிருதம் அவசியம் இல்லை. தாழ்த்தப்பட்டோரும் பேருந்துகளில் பயணிக்கலாம் என சட்ட வடிவம் கொண்டுவரப்பட்டது.

இவையெல்லாம் மக்கள் மனதில் ஆழப் பதிந்து, அதன் கொள்கைகளை எடுத்துச் சொல்ல Justice எனும் பரபரப்பு மிகுந்த பத்திரிக்கையையும் நடத்தி வந்ததால் ஜஸ்டிஸ் பார்டி, நீதிக்கட்சி என்றப் பெயருடன் திகழ்ந்த இயக்கத்தில் அதற்குள்ளும் ஏற்றத்தாழ்வுகள் மலிந்து கிடந்ததால், வெகுண்டெழுந்த வெண்தாடி வேந்தர், தந்தை பெரியார் அவர்கள்,

1944 ல் சேலத்திலே மாநாடு கூட்டி , வீசிடுக வெள்ளையர் தந்த " ராவ்பகதூர், சர் "பட்டங்களை என்று போர் முழக்கம் செய்து, சில சீர்திருத்தங்கள் மேற்கொண்டு, நீதிக்கட்சி எனும் பெயரை மாற்றி, " திராவிடர் கழகம் " எனும் பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார்.

ஐயா கொண்டு வந்த பெயர் மாற்றத் தீர்மானத்தை அம்மாநாட்டில் வாசித்தவர் அறிவுலகமேதை, அன்றைய தளபதி

சி. என். அண்ணாதுரை அவர்கள்.

ஆம் அந்த தீர்மானத்தின் பெயரே

"அண்ணாதுரை தீர்மானம் " என்றும் அழைக்கப்பட்டது.

அண்ணாவைத் தொடர்ந்து, தலைவர் கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், ஈ. வே. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், அம்மையார் சத்தியவாணி முத்து, பேராசிரியர், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சி. பி. சிற்றரசு, சி. வி. எம். அண்ணாமலை, போன்றத் தலைவர்கள் - தோழர்கள் பெரியாரைப் பின் தொடர்ந்து, அவரது பிரச்சார நிகழ்வுகளுக்கு உயிரோட்டம் கொடுத்து, உழைத்து, தென்னகத்தின் வலுவான இயக்கம் திராவிடர் கழகம் எனும் நிலை ஏற்பட்டது.

பின்நாளில் பெரியாருக்கும் - அண்ணா மற்றும் அடுத்தடுத்த தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள், சில கசப்பான நிகழ்ச்சிகள், பெரியாரின் வன்மையான, வலிமிகுந்த பேச்சு இவை தங்கத் தாம்பாளத்தில் விழுந்த விரிசல் போல், அண்ணாவை தனி இயக்கம் காணும் நிலைக்குத் தள்ளியது.

1949 செப்டம்பர் 17 ந்தேதி, தன்னை ஆளாக்கி, அடையாளம் தந்த தலைவர் பெரியாரின் 70 வது பிறந்த நாளில் சென்னை ராயபுரம் பவளக்காரத் தெருவில் உள்ள ஒரு வீட்டில், தோழர்களோடு கலந்தலோசனை செய்து, பல பெயர்களை பரிசீலனை செய்து, இறுதியில் "திராவிட முன்னேற்றக் கழகம்" என்று முடிவெடுத்து அன்று மாலை கொட்டும் மழையில் ராயபுரம் ராபின்சன் பூங்காவில் துவக்கப்பட்டக் கழகம் இன்று தனது பவளவிழாவினைக் கொண்டாடுகிறது.

பேரறிஞர்அண்ணா அவர்களின் 40 வது வயதில், தலைவர் கலைஞரின் 25 வது வயதில் பவளக்காரத் தெருவில் தீர்மானிக்கப்பட்டு, ராபின்சன் பூங்காவில் அறிவிக்கப்பட்ட தனிப்பெரும் இயக்கம் இன்று தனது பவளவிழாவினைக் கொண்டாடுகிறது சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்!

நமது உயிரனைய தலைவர் தளபதியவர்களின் தலைமையில்!

உயிர் காக்கும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அண்ணன் மா. சுப்ரமணியன் அவர்களின் சீரிய ஏற்பாட்டில்!

சமுதாய நல்லியக்கமாக, சமூக அவலங்களை சுட்டெரிக்கும் அண்ணாவின் அறிவாயுதமாக, கலைஞரின் கணையாக, தேர்தல் அரசியலே இல்லையென தீர்மானம் செய்து, உழைத்திட்ட பேரியக்கம், ஒரு பக்கம் காங்கிரஸ், மறுபக்கம் பெரியார் போன்றோரின் எதிர்ப்பு, வசவு.

இவற்றையெல்லாம் கடந்து, எதிர் நீச்சலிட்டு, தமிழகமே ஏறிட்டுப் பார்க்கும் நிலையை அடைந்தது.

அறிஞர் அண்ணா நமக்கு வாய்த்த மணிமகுடம் என்றால், அதில் பொதிக்கப்பட்ட வைரமாய் திகழ்ந்தவர் தலைவர் கலைஞர்.

இவ்விரு தலைவர்கள் தங்களது எரிமலை கக்கும் ஆவேசப் பேச்சால், அனல் பறக்கும் வசனங்களால், அன்றைய தமிழகத்தின் இளைஞர் பட்டாளத்தை கட்டிப் போட்டனர்.

அண்ணாவின் ஆரிய மாயை, கம்பரசம், தீ பரவட்டும், இந்தியைத் திணித்தால்!, நீதிதேவன் மயக்கம், ஓர் இரவு, சந்திரமோகன், வேலைக்காரி போன்ற நாவல்கள் - நாடகங்கள் - திரைப்பட வசனங்கள் தமிழகத்தில் தனித்தன்மை வாய்ந்து, இளைஞர்களை அவர்பால் ஈர்த்தது.

தலைவர் கலைஞரின் மந்திரி குமாரி, அரசிளங்குமரி, பராசக்தி, மனோகரா, பணம், உதயசூரியன், காகிதப்பூ, போன்ற திரைக்கலை வசனங்கள் வர்ணாசிரம, வர்க்கபேத கும்பல்கள் மீது திராவகத்தை வீசியதைப் போல் எரிச்சலூட்டியது.

இவற்றோடு அண்ணாவின் திராவிட நாடு, நம்நாடு, தலைவர் கலைஞரின் முரசொலி, நாவலரின் மன்றம், மதியழகனின் தென்னகம், என் வி. நடராசனின் திராவிடன், ஆசைத்தம்பியின் தனியரசு, சி. பி. சிற்றரசின் இனமுழக்கம், இராம. அரங்கண்ணலின் அறப்போர் போன்ற இதழ்கள் இயக்கத்தின் கொள்கைகளைத் தாங்கி பல தரப்பட்ட மக்களின் பார்வையைக் கவர்ந்தது.

1956 ல் நடைபெற்ற கழகத்தின் மாநாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் ஈடுபடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டதை அடுத்து, 1957 ல் இந்தியாவின் இரண்டாவது பொதுத்தேர்தலில் முதன்முறையாகக் களம் கண்ட கழகம் அண்ணா, கலைஞர், பேராசிரியர், ஆசைத்தம்பி, சத்தியவாணி முத்து என 15 சட்டமன்ற உறுப்பினர்களையும், சம்பத், தர்மலிங்கம் என 2 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு தனது தேர்தல் கணக்கினைத் துவங்கியது.

வழக்கறிஞர். **வெ. அன்புவாணன்**
கொள்கை பரப்பு துணைச் செயலாளர்.

1953 மும்முனைப் போராட்டம் ஏற்படுத்திய அதிர்வலைகள் அதில் தலைவர் கலைஞரின் கல்லக்குடி போராட்டம், இந்தியா வெங்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

நேரு பண்டிதரைக் கூட நிம்மதி இழக்கச் செய்தது, அண்ணாவின்,

"பெரியமனிதர், சிறிய வார்த்தை பேசி விட்டார். மன்னிப்போம் மறப்போம்!" எனும் பெருந்தன்மை மிகுந்த பேச்சு.

"கும்பி எரிகிறது. குடல் கருகுகிறது. கோட்டை வாசிகளுக்கு கோடை வாசம் ஒரு கேடா? " எனும் தீப்பந்தக் கேள்விகள் அன்றைய ஆட்சியாளர்களை திக்குமுக்காட செய்தது.

"வடக்கு வாழ்கிறது! தெற்கு தேய்கிறது! "என அவர் உதிர்த்த வாதம் இன்றளவும் உயிர்ப்புடன் இருக்கிறது.

அண்ணாவைத் தொடர்ந்து தலைவர் கலைஞரின் மேடை, சட்டமன்றப் பேச்சுக்கள், திரை வசன வீச்சுக்கள் தி.மு.க.வை அடுத்தடுத்த உயர்விற்கு கொண்டு சென்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்கூட்டங்கள் மாலைநேரத்து பல்கலைக்கழகம் போன்றே திகழ்ந்தது.

அண்ணாவின் தலைமையில் அமைந்த கழகம் முன்னெடுத்த விலைவாசியுயர்வுப் போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம், திராவிடநாடு போராட்டம், போன்றவை அவரது அரசியல் வரலாற்றின் மிக முக்கியமானவை.

அதனால் தான் அண்ணா அவர்கள் தான் ஆட்சியிலிருந்த சொற்ப காலத்தில் தமிழ்நாடு பெயர் மாற்றம், இந்தியைத் தவிர்த்து இருமொழி கொள்கை, தன்னை ஆளாக்கிய ஐயாவை மனதில் கொண்டு, சுயமரியாதை திருமணங்கள் செல்லுபடியாகும் எனும் வரலாற்று சிறப்பு மிக்க சட்டங்களை தந்தார்.

அண்ணாவிற்குப் பிறகு தலைமை ஏற்ற தலைவர் கலைஞர் அவர்கள் எந்த ஒரு மாநில கட்சி தலைவரும் நிகழ்த்திடாத சாதனைகளை, சந்திக்காத கொடுமைகளை, சோதனைகளை, தாங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் எனும் மாநிலக்கட்சியை பலமுறை மத்திய அரசின் தலைமைப் பொறுப்பை நிர்ணயிக்கும் நிலைக்கு உயர்த்தினார்.

கழகத்தின் இந்த 75 கால தொடர் பயணத்தில் சந்தித்த பல சோதனைகளில் "நெருக்கடி நிலை " எனும் நெருப்பு காண்டம் மறக்கவே முடியாதது.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த தியாக மறவர் சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் போன்ற தியாகிகளை பலிகொடுத்தோம்.

வீரவேங்கை, மாமேதை முரசொலி மாறன், ஆற்காடு வீராசாமி போன்றோர் அடிபட்டு, உதைபட்டு, மிதிபட்டு, வதைபட்டு இயக்கத்திற்காக ஏற்ற தியாகங்கள் இன்றும் நமது உடல், மெய் சிலிர்க்கச் செய்கிறது.

இதுமட்டுமா??

23 வயது இளைஞர். வாழ்க்கை இல்லறம் துவக்கி , சில மாதங்களில் மத்திய அரசின் கழுகுப் பார்வையில் விழுந்து, காராக்கிரகத்தில் பட்ட காயங்கள், சொல்லிட முடியாத சித்திரவதைகள், எண்ணிடவே முடியாத உள் - வெளி காயங்கள், என தன்னை வறுத்திய நெருக்கடி நிலையெனும் உலைகளத்தில் புடமிடப்பட்ட தலைவர் கலைஞரின் போர்வாளாகத் திகழ்பவர் தான், இன்றைய நமது கழகத்தின் தலைவர், இந்திய திருநாட்டில் கம்பீர முதல்வராக காட்சி தரும், மாநிலத்தில் நல்லாட்சி தரும் தமிழினத் தளபதியவர்கள்.

சோதனைகளை, சாதனைகளாக்கி,

தடைக்கற்களை படிக்கட்டுக்களாக்கி, இன்று தடந்தோல் உயர்த்தி, தமிழ்நாட்டின் ஆட்சி கட்டலில் அமர்ந்து, மக்கள் நலன் பேணும் மகத்தான பரிபாலனம் செய்கிறார் நமது தலைவர் அவர்கள்.

இன்று பவளவிழா ஆண்டில் நடைபோடும் கழகம் சற்றே திரும்பிப் பார்த்தால்,

எத்தனை எத்தனை போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், சிறைவாசங்கள், கொலை வெறி தாக்குதல்கள், உயிர் பலி நிகழ்வுகள், ஏச்சுக்கள், பேச்சுக்கள், ஏளனங்கள், இன்னும், இன்னும்..... பட்டியலிட்டே போகலாம்.

எத்தனை கட்சிகள் துங்கி, துவங்கிய நிலையிலேயே உருபெறாமல் மறைந்தன. சிசு வதை செய்யப்பட்டு, சிதைந்து போயின.

ஆளுநர் பதவிக்கென்றே அச்சாரம் போட்டு, கருவிலேயே கலைக்கப்பட்ட கட்சிகள் எத்தனை? காட்சிகள் எத்தனை??

அன்றிருந்த காமன்வீல் கட்சி எங்கே? ஜனசங்கம் எங்கே? ஜனதா எங்கே? ஜன் மோர்ச்சா தான் எங்கே??

பிரஜா சோஷலிஸ்டு இல்லை. சுதந்திரா கட்சியும் இன்றில்லை. தமிழரசுக் கழகம் இல்லை. உழவர் உழைப்பாளர் கட்சி இல்லை. கா.கா.தே.க.வும் இல்லை. எ. எ. பு. க. இல்லை (எம். ஜி. ஆர். எஸ். எஸ். ஆர் புரட்சி கழகம்) இவ்வளவு ஏன்? மத்தியில் கூட DMK எனும் பெயரில் ஒரு கட்சி இருந்தது. தலித் மன்சூர் கிஷான் கட்சி. அதுவும் இப்போது இல்லை. மாணவர் கூட்டமைப்பின் மூலம் அஸ்ஸாமில் ஆட்சியை பிடித்த பிரபல்லகுமார் மகந்தாவின் கட்சி, என்னவாயிற்று? என்று சொல்லிக் கொண்டே போகலாம். இவற்றோடு இன்னும் பல கட்சிகள் உயிர்ப்புடனோ, உயிருடனோ இல்லாமல், லெட்டர் பேட்களில், மரணப் படுக்கையில் சுவாசித்துக் கொண்டிருக்கும் நிலையில், பெரியாரின் துணிவோடு, அண்ணாவின் கனிவோடு, தலைவர் கலைஞரின் கம்பீரத்தோடு, புதுப்பொலிவோடு, இளைஞர் படை வலிவோடு 75 ஆண்டுகளாக பீடுநடை போட்டு, இன்று நமது தளபதியவர்களின் தலைமையில் எதிரிகளுக்கு பிரம்மிப்பு, பிரம்மிப்பு, பிரம்மாண்டம் எனும் நிலையில் பயணிக்கிறது.

இத்தனைக்கும் அடித்தளமிட்ட பெரியார், அண்ணா, பிறந்தநாள், கழகம் துவங்கிய திருநாளெனும் முப்பெரும் விழாவை தனது பவளவிழாவாக அண்ணா, கலைஞர், தளபதி, உதயநிதி எனும் நான்காம் தலைமுறை வரை தலைவர்களைக் கொண்ட மாபெரும் ஜனநாயகப் பேரியக்கமாம் நமது திராவிட முன்னேற்றக் கழகம் பெருமை பொங்க கொண்டாடி மகிழவிருக்கிறது.

ஆம் இது,

அண்ணா அமைத்த கழகம்!

அவர் அறிவால் உயர்ந்த கழகம்!

கண்ணான கலைஞர் கழகம்!

நமைக் கண் போல் காத்திடும் கழகம்!

பொன்னான சேவையை இந்நாட்டிற்கீந்த பேராசிரியரின் கழகம்!

கொள்கை கோமகன், தியாகப் பெரும் சீலன் தளபதியின் கழகம்!

எதிரிகளை ஒரு கல் கொண்டு, ஏளனச் சொல் கொண்டு ஓடவிடும், ஓங்கு புகழ் உதயநிதியின் கழகம்!!

வாழ்க திராவிட முன்னேற்றக் கழகம் வரலாற்று பொன்னேட்டில் நூற்றாண்டுகள் பல கடந்தே!

பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி பண்ருட்டி நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்டக் கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. நகர மன்றத் தலைவர் க.இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார். மாவட்டச் செயலாளர் – தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்.

மீண்டும் 'மஞ்சப்பை'!

தமிழ்நாடு முழுவதும் 2.2 லட்சம் விழிப்புணர்வு பிரச்சாரம்!

தமிழ்நாடு அரசு தகவல்!

சென்னை, செப்.18-

மாநிலம் முழுவதும் 14 வகையான ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் (SUP) உற்பத்தி, விற்பனை மற்றும் பயன்பாடு ஆகியவற்றைத் தடை செய்து, ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடையை அமல்படுத்திய மாநிலங்களில் தமிழ்நாடு அரசும் ஒன்றாகும். தடைக்கு கூடுதலாக, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், பிளாஸ்டிக்கிற்கு மாற்றானவற்றை ஊக்குவிப்பதற்கும், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்துவதன் மூலமும் மாநிலம் பன்முக அணுகுமுறையை எடுத்து வருகிறது. "மீண்டும் மஞ்சப்பை"- "பாரம்பரிய துணிப்பைகளை பயன்படுத்தும் பழக்கத்தை மீண்டும் கொண்டு வருவதற்கான அழைப்பு" என்ற தலைப்பில் ஒரு மாநில பிரச்சாரம், பாரம்பரிய இயற்கை அடிப்படையிலான தீர்வுகளுடன் "தூக்கி எறியும் பிளாஸ்டிக்கிற்கு எதிரான மக்கள் பிரச்சாரம்" என்ற பெயரில், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மீதான தடையை அமல்படுத்துவதுடன் மக்களிடையேவிழிப்புணர்வை ஏற்படுத்தவும், பிளாஸ்டிக்கிற்கு எதிரான மாற்று பொருட்களை விளம்பரப்படுத்தவும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021 டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது. 'மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்,' பொது மக்களிடையே விழிப்புணர்வு மற்றும் சுற்றுச்சுழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்களை ஏற்றுக் கொள்வதில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மஞ்சப்பை பிரச்சாரத்தின் விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை ஊக்குவிப்பதில் கவனம் செலுத்தி மாநிலம் முழுவதும் 2.2 லட்சத்திற்கும் அதிகமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளில் சாலைக் காட்சிகள், பேரணிகள், தெரு நாடகங்கள், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடை மற்றும் நிலையான வாழ்வு குறித்த விளக்கங்கள்/ விரிவுரைகள், கடற்கரை தூய்மைப்படுத்துதல், நாட்டுப்புற நடனங்கள், விழிப்புணர்வு செய்தி வாகனங்கள், மாரத்தான், காட்சிப் பலகை மூலம் விழிப்புணர்வு மற்றும் மஞ்சப்பை விநியோகம் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் போன்ற புதுமையான செயல்பாடுகள் அடங்கும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் குழந்தைகளைக் கவரும் வகையில், பிளாஸ்டிக்கின் பாதிப்புகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்களின் நன்மைகளைப் பற்றி அவர்களுக்கு கற்பிக்க முக்கிய தகவல்களுடன் கூடிய 19 அனிமேஷன் கல்வி வீடியோக்களையும் தயாரித்துள்ளது. இந்தக் காணொளிகள் கிட்டத்தட்ட 60,000 பள்ளிகள் மற்றும் ஒன்பது ஆதி திராவிட பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இந்த முயற்சியானது, சிறந்த, நிலையான எதிர்காலத்திற்காக இளம் மாணவர்களுக்கு சிறு வயதிலிருந்தே கற்பிக்கப்படுவதை உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், 30, அக்டோபர் 2023 அன்று, சென்னையில் மஞ்சப்பை படைப்பிரிவை அறிமுகப்படுத்தியது. இதில் இரண்டு மின்சார கார்கள் மற்றும் ஆறு மின்சார இரு சக்கர வாகனங்கள் அடங்கும். இந்த படைப்பிரிவு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடைக்கு எதிரான விதி மீறுபவர்களை கண்டறிந்து உள்ளாட்சி அமைப்புகள் மூலம் உடனடி நடவடிக்கை எடுக்க உறுதி செய்கிறது. அதன் வெற்றியின் அடிப்படையில், சென்னையில் இரண்டாவது மஞ்சப்பைப் படை 12, மார்ச் 2024 அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் ஆகஸ்ட் 2024 இல் ஊட்டி, கொடைக்கானல் மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் மற்றும் சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலங்களிலும் "பசுமைப் படை" விரிவுபடுத்தப்பட்டது. கூடுதலாக, 'நீலப் படை' 27, ஆகஸ்ட் 2024 அன்று கடல் பிளாஸ்டிக் மாசுபாட்டை மையமாகக் கொண்டு சென்னையில் உள்ள மெரினா கடற்கரையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நீல மற்றும் மஞ்சள் படைப்பிரிவுகள் - சராசரியாக 74,000 கிலோமீட்டர்களை கடந்து, 5,400க்கும் மேற்பட்ட இடங்களை சென்றடைந்துள்ளனர். மேலும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிற்கு எதிராக நிலையான மாற்றங்களை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 30, அக்டோபர் 2023 அன்று, கடல் பிளாஸ்டிக் மாசுபாட்டை கண்காணிக்கவும், மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சென்னை பெசன்ட் நகர் கடற்கரையிலும் மற்றும் 12, மார்ச் 2024 அன்று நீலாங்கரை கடற்கரையிலும் கடலோர குப்பை கண்காணிப்பு மையங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. இம்மையங்களில் மஞ்சப்பை விற்பனை இயந்திரம் மற்றும் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக்குகள் மற்றும் சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் ஆகியவை பள்ளி மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் காட்சிப்படுத்தப்படுகின்றன. இதுவரை இரண்டு மையங்களிலும் 5,000 பார்வையாளர்கள் பார்வையிட்டு, 16 பள்ளி குழுக்கள் பங்கேற்று, 2,215 துணிப் பைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. பெருநிறுவனங்களுடன் இணைந்து சமூக மற்றும் சுற்றுச்சூழலில் தாக்கத்தை ஏற்படுத்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன.

விழிப்புணர்வு மற்றும் அமலாக்கத்தில், அதன் முயற்சிகளுக்கு கூடுதலாக, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மஞ்சப்பை விருதுகள் போன்ற முன்முயற்சிகள் மூலம் நிலையான நடைமுறைகளை மேற்கொண்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்த விருதுத் திட்டம், பிளாஸ்டிக்கிற்கு மாற்றானவற்றை ஊக்குவிப்பதிலும் சமூக விழிப்புணர்வில் தீவிரமாக ஈடுபடுவதிலும் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களை அங்கீகரிக்கிறது. அதன் தொடக்கத்தில் இருந்து, மஞ்சப்பை விருதுகள் ஆறு பள்ளிகள், ஆறு கல்லூரிகள் மற்றும் மூன்று வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது சமூக ஈடுபாடு மற்றும் நிலைத்தன்மை முயற்சிகளுக்கான அர்ப்பணிப்பை கணிசமாக மேம்படுத்துகிறது.

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தை வலுப்படுத்தவும், சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளை அணுகுவதை மேம்படுத்தவும், துணிப் பைகளை வழங்கும் புதுமையான மஞ்சப்பை விற்பனை இயந்திரங்களை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியது. மாநிலம் முழுவதும் அதிக அளவில் மக்கள் நடமாடும் 188 இடங்களில் நிறுவப்பட்ட இந்த இயந்திரங்கள் கிட்டத்தட்ட 385,000 பைகளை இதுவரை விநியோகித்துள்ளன.

இந்தப் பிளாஸ்டிக் தடையானது, 238 ஒருமுறை பயன்படுத்தும் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் உற்பத்தித் தொழில்களை மூடுவதற்கு வழிவகுத்துள்ள அதே வேளையில், 725 சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்கள் உற்பத்தியாளர்களின் உயர்வுக்கு வழிவகுத்தது. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகள் மீதான தடையை அமல்படுத்துவதன் ஒரு பகுதியாக, மாநிலம் முழுவதும் 16 லட்சத்துக்கும் அதிகமான ஆய்வுகள் உள்ளாட்சி அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டு, சுமார் 2600 டன் தடை செய்யப்பட்ட ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. மேலும், விதியை மீறுபவர்களிடம் இருந்து 19 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், செப்டம்பர் 26-27, 2022 அன்று, 173 கண்காட்சியாளர்கள் மற்றும் 5,000 பார்வையாளர்களைக் கொண்ட சுற்றுச்சூழல் மாற்றுகள் மற்றும் புதிதாக தொழில் தொடங்குவோர் மாநாட்டின் தேசிய கண்காட்சியை நடத்தியது. இந்த நிகழ்வு உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர் இடையே இணைப்புகளை எளிதாக்கியதுடன் சூழல் நட்பு தீர்வுகளை முன்னிலைப்படுத்தியது. கண்காட்சியைத் தொடர்ந்து, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக்கிலிருந்து மாறுவதற்கு உதவும் வகையில், 725 சுற்றுச்சூழல் மாற்று உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் கோப்பகத்தை வெளியிட்டது.

மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாற்று பொருட்களின் வாடிக்கையாளர்களுடனான அனுபவத்தினால், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் ஆகஸ்ட் 16,2024 அன்று பேக்கத்தான் (Bagathon) என்ற பெயரில் ஹேக்கத்தான் (hackathon) போட்டியை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஹேக்கத்தான் போட்டியில் தொழில்முனைபவர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களிடமிருந்து குறைந்த செலவில் உற்பத்தி முறைகளை ஆராய்வதன் மூலம் துணிப் பைகளின் விலையை 5க்குள் குறைக்க வழிவகுக்கும். வெற்றி பெறுபவர்கள் தங்கள் புதுமையான யோசனைகளை விரிவுபடுத்துவதற்கும் வணிகமயமாக்குவதற்கும் ஆதரவைப் பெறுவார்கள்.

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடையை திறம்பட கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் வலுவான டிஜிட்டல் தொழில்நுட்பங்களை செயல்படுத்தியுள்ளது. ஜூன் 6, 2023 அன்று தொடங்கப்பட்ட இந்த முயற்சியில் மீண்டும் மஞ்சப்பை கைபேசி செயலி மற்றும் இணையதளம் முக்கிய பங்கு வகிக்கிறது. பயன்பாட்டில் 900 தயாரிப்பு உற்பத்தியாளர்களின் சுயவிவரங்கள், மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள்நிறுவப்பட்டுள்ள இடங்களின் புள்ளிவிவரங்கள் மற்றும் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடை மீறல்களுக்கான தகவல் அளிக்கும் வசதி ஆகியவை உள்ளன. 18,000 பார்வையாளர்களுடன், இது சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப்பொருட்களை அணுகுவதை கணிசமாக மேம்படுத்தி நிலையான நடைமுறைகளை ஆதரிக்கிறது.

செயலுக்கு கூடுதலாக, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் தடைக்கு எதிரான விதி மீறல்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகள், மஞ்சப்பை விற்பனை இயந்திர செயல்பாடுகள் மற்றும் பசுமை படை மற்றும் கடற்கரை மையம் செயல்பாடுகள் பற்றிய தரவுகள், ஆப்ஸ் அடிப்படையிலான கருவிகள் மூலம் கண்காணிக்க பிற டிஜிட்டல் கண்காணிப்பு வழிமுறைகளை உருவாக்கியுள்ளது. இந்தத் தரவுகள் டிஜிட்டல் டாஷ்போர்டுகள் மூலம் தலைமையகத்தில் நிகழ்நேரத்தில் கண்காணிக்கப்பட்டு, சிறந்த மேற்பார்வை மற்றும் சரியான நேரத்தில் தரவுகள் பெறுவதை உறுதி செய்கிறது.

மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம், விழிப்புணர்வு, அமலாக்கம் மற்றும் டிஜிட்டல் கண்காணிப்பு ஆகியவற்றின் மூலம் தமிழகத்தில் நிலையான நடைமுறைகளை வெற்றிகரமாக ஊக்குவித்து, ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை உபயோகிப்பதைக் குற